
# திராவிடத்தால் வாழ்கிறோம்

968

எழுத்து: கோவி.லெனின்
ஓவியம்: கி.சொக்கலிங்கம்




-வாழ்வோம்

# திராவிட மாடல் அரசு

**நீரை.மகேந்திரன்**

139




`முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் எனும் நான்' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்ட நாளில் இருந்து, தமிழ்நாட்டின் வளர்ச்சிக்கு நமது முதலமைச்சர் செயல்படுத்திவரும் பல்வேறு திட்டங்களைத் தரவுகளோடு உலகுக்குப் பறைசாற்றுகிறது இந்தப் பகுதி...

# அன்புக்கரங்கள் திட்டம்!

## ஃப்ரெண்டாக, பேரென்ட்டாக ஒரு முதலமைச்சர்!

இந்தியாவில் குழந்தைத் தொழிலாளர் முறையை ஒழித்த மாநிலங்களில் முன்னிலையில் உள்ள மாநிலம் தமிழ்நாடு. கல்வி, வேலைவாய்ப்பு, மருத்துவம், தொழில் கட்டமைப்புகள், பாலின சமத்துவம், பெண்கள் பாதுகாப்பு, சமூக நலத் திட்டங்கள் என அனைத்திலும் சிறந்து விளங்கும் ஒரே மாநிலம் தமிழ்நாடுதான். திராவிட மாடல் ஆட்சியின் கடந்த நான்கு ஆண்டுகளில், இந்தத் துறைகள் சார்ந்து ஒன்றிய அரசு அளிக்கும் குறியீடுகளே அதற்கு சாட்சி.

இந்தச் சாதனைகள் ஒருபுறம் இருந்தாலும், சமூக நீதி என்பதன் உண்மையான அர்த்தம், 'எல்லார்க்கும் எல்லாம்' என்பது மட்டுமல்ல; ஒடுக்கப்பட்டவர்களிலும் ஒடுக்கப்பட்டவர்களாக உள்ளவர்களை அடையாளம் கண்டு, அவர்களுக்கு அனைத்தையும் கொண்டு சேர்ப்பதுதான் அதன் உண்மையான அர்த்தமாகும் என செயல்பட்டுவருகிறது, திராவிட மாடல் அரசு. அதற்கான சாட்சிதான் அன்புக்கரங்கள் திட்டம்.

பெற்றோரை இழந்த குழந்தைகள், ஆதரவற்றவர்கள் என அடையாளப்படும் சமூகத்தில், அவர்கள் ஆதரவற்றவர்கள் அல்ல; அவர்களுக்குத் துணையாக அரசு இருக்கிறது. அவர்களுக்குப் பெற்றோராக, உடன்பிறந்தோராக, தோழனாக, உற்ற துணையாக உதவி செய்வதற்கு எனக் கொண்டு வரப்பட்ட திட்டம்தான் அன்புக்கரங்கள். சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத் துறை சார்பில், கடந்த 15.09.2025 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டது.

2025 ஆண்டு சட்டமன்ற வரவு-செலவுத் திட்ட அறிக்கையில், 'தமிழ்நாட்டில் வறிய நிலையில் உள்ள சுமார் 50 ஆயிரம் குடும்பங்களில், குழந்தைகள் தங்கள் இரண்டு பெற்றோரையும் இழந்து, உறவினர்கள் பாதுகாப்பில் வளர்ந்து வருவது தெரியவந்துள்ளது. அந்தக் குழந்தைகளை அரவணைத்து, தொடர்ந்து பாதுகாத்திட அரசு நடவடிக்கை எடுக்கும். குறிப்பாக, அவர்கள் இடைநிற்றல் இன்றி கல்வியைத் தொடர, மாதம் 2,000 ரூபாய் வீதம் உதவித்தொகை வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். அவர்களின் பள்ளிப்படிப்பு முடிந்ததும், கல்லூரிக் கல்வி மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் அளிக்க உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்' என்றும் அறிவிப்பினை வெளியிட்டது அரசு.

அதனைத் தொடர்ந்து, அந்தத் திட்டத்தினை 'அன்புக்கரங்கள்' என்று செயல்படுத்த நடவடிக்கைகள் விரைவுபடுத்தப்பட்டன.





குடும்பச் சூழ்நிலை காரணமாக, குழந்தைகள் கல்வியறிவு பெறுவதைத் தவற விட்டுவிடக் கூடாது என்ற அடிப்படையில் உருவானதுதான், 'அன்புக்கரங்கள்' திட்டம்.

6,082 குழந்தைகள் மாதம் 2,000 உதவித் தொகை பெறுவர்.

### தேர்வும் – பரிந்துரையும்

முதற்கட்டமாக, தமிழ்நாடு மின் ஆளுமை (இ-சேவை வலைதளம்) நிறுவனத்திடமிருந்து தரவுகள் பெறப்பட்டு, (TNEGA) அன்புக்கரங்கள் திட்டத்துக்கு என உருவாக்கப்பட்ட கைப்பேசி செயலியில் பதிவேற்றம் செய்யப்பட்டன. அந்தத் தகவல்களை இல்லம் தேடி கல்வி, தன்னார்வலர்கள் மற்றும் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக்கொண்டு 2025-ஆம் ஆண்டு கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

திட்டத்தில் பயன்பெறுவதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பிள்ளைகளை, மறு சரிபார்ப்பு அலுவலரைக் கொண்டு ஆய்வு மேற்கொண்டு, மாவட்டக் குழந்தைகள் பாதுகாப்பு அலுவலரால் சரிபார்க்கப்பட்டு, மாவட்ட ஆட்சியர் பரிந்துரைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்தத் திட்டத்தில், பெற்றோர்கள் இருவரையும் இழந்த குழந்தைகள், கைவிடப்பட்ட குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து மற்றொரு பெற்றோர் குழந்தையைக் கைவிட்டுச் சென்றிருப்பின், ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து மற்றொரு பெற்றோர் உடல்ரீதியாவும் மனரீதியாகவும் பாதிக்கப்பட்டவராக இருந்தால், ஆதரவு தேவைப்படும் குழந்தைகள் - பெற்றோரில் ஒருவர் இறந்து மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், பெற்றோரில் ஒருவர் இறந்து மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்துவந்தால், அவர்களின் குழந்தைகள் இந்தத் திட்டத்தில் பயன்பெறத் தகுதியுள்ள குழந்தைகளாக அடையாளம் காணப்பட்டனர்.

இப்படி, தமிழ்நாடு முழுவதும் முதற்கட்டமாக 6,082 குழந்தைகள் அடையாளம் காணப்பட்டனர்.

இந்தக் குழந்தைகள், குடும்பச் சூழ்நிலை காரணமாகக் கல்வி இடைநிறுத்தம் செய்துவிடக் கூடாது என்பதும், வறுமையால் குழந்தைத் தொழிலாளிகளாக மாறிவிடக் கூடாது என்பதும்தான் அன்புக்கரங்கள் திட்டத்தின் நோக்கம். 15.09.2025 அன்று, சென்னை கலைவாணர் அரங்கத்தில் திட்டத்தைத் தொடங்கிவைத்து, பயன்பெறும் குழந்தைகளுக்கான அடையாள அட்டையை வழங்கினார் முதலமைச்சர்.

அப்போது பேசிய முதலமைச்சர் அவர்கள், அந்தக் குழந்தைகள்மீது வெளிப்படுத்திய அக்கறைதான் சமூக நீதி அரசுக்குச் சான்றாகும்.

திட்டத்தில் இணைந்த குழந்தைகளுக்கு அறிவுரை தந்த முதலமைச்சர், "நீங்கள் எல்லோரும் படித்து முன்னேறி வர வேண்டும்! இதுதான் என்னுடைய விருப்பம், எங்களுடைய லட்சியம்! இந்த லட்சியத்துக்குத் துணையாகும் நம்முடைய திராவிட மாடல் அரசின் கரம்தான், அன்புக்கரம்! உங்களுக்கு உறுதுணையாக, உங்கள் ஃப்ரெண்டாக, உங்கள் பேரன்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்" என்று நெகிழ்ச்சியுடன் கூறினார். எல்லோருக்கும் எல்லாம் எளிதாகக் கிடைத்துவிடுவதில்லை. ஆனால், அதை சாத்தியமாக்குகிறார், நம் திராவிட மாடல் நாயகர்.

> "உங்களுக்கு உறுதுணையாக, உங்கள் ஃப்ரெண்டாக, உங்கள் பேரன்ட்டாக, இந்த முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் இருக்கிறேன்."

...சாதனை தொடரும்

## பதில் உண்டா பிரதமர் மோடி?

2020-ஆம் ஆண்டில் அமெரிக்க அதிபர் டிரம்ப் இந்தியா வந்தபோது, குஜராத்தில் அவருக்கு சிலை வைத்து வரவேற்றனர். டிரம்பிடம் பிரதமர் மோடி காட்டிய பாசத்தின் வெளிப்பாடாக, பா.ஜ.க. தொண்டர்கள் இச்சிலையை எழுப்பினர். அத்தகைய மோடியின் பாசத்திற்குரிய டிரம்ப், இன்றைக்குப் பல வழிகளில் இந்தியாவுக்குப் பொருளாதார நெருக்கடிகளையும், வேலைவாய்ப்பு நெருக்கடிகளையும் ஏற்படுத்தி வருகிறார். குறிப்பாக, ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் இறக்குமதி செய்வதற்கு எதிராக, இந்தியப் பொருட்களுக்கு 50% வரி விதித்தார் டிரம்ப்.

ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் வாங்குவதால், பெரிதும் பயனடைவது அம்பானி நிறுவனம். ஆனால், ஏற்றுமதிக்கான வரி விதிப்பால் லட்சக்கணக்கான வியாபாரிகள் நிலைகுலைந்துள்ளனர். அவர்களைக் காக்க இதுவரை மோடி முயற்சிசெய்யவில்லை. இந்நிலையில், அமெரிக்காவில் H1-B விசாக்களுக்கான வருடாந்திர விண்ணப்பக் கட்டணத்தை ஒரு லட்சம் டாலராக, அதாவது இந்திய மதிப்பில் 88 லட்சம் ரூபாயாக உயர்த்தியிருக்கிறார், டிரம்ப். வேலைவாய்ப்புகளை அமெரிக்கர்களுக்கே தக்கவைக்க வேண்டும் என்ற நோக்கத்துடன், இதைச் செய்ததாகக் கூறுகிறார். ஆனால், பாதிக்கப்பட்டிருப்பதோ பெரும்பாலும் இந்தியர்கள்.

இதுதொடர்பாகத் தனது சமூக வலைதளப் பக்கத்தில் எழுதியுள்ள பத்திரிகையாளர் பரக்கத் அலி, "2024-இல் H1-B விண்ணப்பதாரர்களில் 71% பேர் இந்தியாவைச் சேர்ந்தவர்கள். ட்ரம்புக்கு சிலை, நமஸ்தே டிரம்ப் என பா.ஜ.க. ஆதரித்த டிரம்புதான், இந்தியர்களுக்கு 50 சதவிகித இறக்குமதி வரி, விசா கட்டணம் உயர்வு என ஆப்பு வைத்திருக்கிறார்" எனப் பதிவிட்டுள்ளார். இந்தியா – பாகிஸ்தான் போரை நான்தான் நிறுத்தினேன் என்று டிரம்ப் கூறியபோதும் மோடி வாய் திறக்கவில்லை. இந்தியர்களின் வணிகம், வேலைவாய்ப்பு முடங்கும் சூழலிலும் வாய் திறக்க மறுக்கிறார் என்று கடும் விமர்சனங்கள் எழுந்துகொண்டே இருக்கின்றன. பதில்தான் இன்னும் கிடைக்கவில்லை.

## ஃப்ளாஷ்பேக்



### நினைவில் நிலைத்து நிற்கும் புகைப்படம்!



பால. சீத்தாராமன்

தலைவர் கலைஞரால் கட்டப்பட்ட திருவாரூர் அரசு கலைக் கல்லூரியில் நான் இளங்கலை பி.ஏ. இறுதியாண்டு பயின்றபோது, கல்லூரியின் மாணவர் தி.மு.க. தலைவராகவும் பணியாற்றும் வாய்ப்பு பெற்றேன். 1981-ஆம் ஆண்டு, ஏப்ரல் 4 -ஆம் தேதி நடைபெற்ற கல்லூரி ஆண்டு விழாவுக்கு சிறப்பு விருந்தினராகக் கழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களை அழைத்திருந்தோம். அவரும் கல்லூரி வாயிலில், மாணவர் தி.மு.க.சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட கொடிக்கம்பத்தில் கழகக் கொடியேற்றி, பின் கல்லூரி ஆண்டு விழாவிலும் கலந்துகொண்டு சிறப்பித்தார். அந்த நிகழ்ச்சியின்போது, தலைவர் அவர்களை வரவேற்று மகிழ்ந்த, நினைவில் நிலைத்து நிற்கும் புகைப்படம்.

**– பால.சீத்தாராமன், அமைப்பாளர், கலை இலக்கிய பகுத்தறிவுப் பேரவை, மருத்துவக் கல்லூரிப் பகுதி, தஞ்சாவூர்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை – 600 018.
வாட்ஸ்அப் எண் : 90033–24473 மின்னஞ்சல்: youthwing@dmk.in

## நம் வரலாறு

### காமராஜரிடம் போர் நிதி!

1962-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 2-ஆம் தேதி, கழகத்தின் சார்பில், போர் நிதிக் கூட்டம் சென்னையில், எஸ்.ஐ.ஏ.ஏ. திடலில் நடைபெற்றது. பேரறிஞர் அண்ணா அவர்களிடம் மக்கள் வரிசையாக நின்று பணம் அளித்தனர். தாய்மார்கள் வளையல், தோடு, மோதிரம் போன்ற தங்க நகைகளை அளித்தனர். அன்று ஒருநாள் மட்டும் ரூ.35,000 ரொக்கமாகவும், தங்க நகைகளும் போர் நிதியாகத் திரட்டப்பட்டன. இந்த நிதியை சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் நாவலர், கழகப் பொருளாளர் கலைஞர் ஆகியோர் முதலமைச்சர் காமராஜரிடம் வழங்கினர்.

RNI 1244/57 - Postal Reg.No.MA/43/2024-2026.Licenced to post under without pre payment of postage vide No.TN/WPP-94/SR/2024-2026 Published by Karthikeyan Shanmugasundaram on behalf of Murasoli Trust from No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 and Printed by D.Karthikeyan at Dinakaran Press, No.2/2, Melur Main Road, Uthangudi, Madurai - 625 107. Editor: Karthikeyan Shanmugasundaram, Regn.No.7436, Ph:044-2817 9191, 2817 9131 Fax: 2817 9292.